**மண்முனை மேற்கு பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 Vg;uல் 16 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை மேற்கு பிரதேச சபையின் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்.

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்.

நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று அது முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக ரூபா.185,062 பெறுமதியான தளபாடங்கள் அழிக்கப்பட்டிருந்த போதிலும், அப் பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்படாமையினால் நிதிக்கூற்றில் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) மீண்டுவரும் செலவு விடயங்களான டயர்கள், மற்றும் உரப்பைகள் ஆகியவற்றுக்கான கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா.162,675 தொகை சொத்தாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ஐந்து மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா.5,390,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள். |
|---|---|---|
| | ரூபா | |
| களஞ்சிய இருப்பு | 3,342 | களஞ்சியப் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| ஊழியர் பிணைவைப்பு | 2,000 | பிணைவைப்பு பெற்றுக்கொண்ட ஊழியர்களின் விபரம் |

### 1.3.4 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.3,170,306 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,652,788 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.1,482,482 வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானம், உள்ளபடியான வருமானம், திரண்ட நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகை | 2,135,000 | 1,811,214 | 302,499 |
| தண்டப்பணம் | 2,566,000 | 2,302,147 | 307,445 |
| ஏனைய வருமானங்கள் | 2,117,500 | 1,257,633 | 25,350 |

### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் சபை அண்ணளவாக ரூபா.500,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

2014 ஆம் ஆண்டுக்கான நீதிமன்ற தண்டப்பண நிலுவை ரூபா.1,975,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

(அ) கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் தாண்டியடி விளையாட்டு மைதானம் அமைத்தலுக்காக பெறப்பட்ட ரூபா.298,500 ஆனது வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வைப்புக்கணக்கில் உள்ள அத்தொகையை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண அபிவிருத்தி நிதியின் (PSDG) கீழ் பெறப்பட்ட தொகை ரூபா.1,532,035 ஆனது வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் அத்தொகை அந்நோக்கத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதும் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வைப்புக்கணக்கில் உள்ள அத்தொகை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க

உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக்கட்டுப்பாடு

-------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 69% தொடக்கம் 98% வரையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக்கட்டுப்பாடு
(இ) வருமானச்சேகரிப்பு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) நிலையான சொத்துக்கட்டுப்பாடு